[1982 மார்ச் 9

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, எல்லா பிரிவுகளையும் ஒவ்வொரு பெரிய மருத்துவமனையிலும் ஏற்படுத்துவது என்பது இயலாத காரியம். பாரதப் பிரதமர் அவர்கள் கூட அண்மையில் 'லேடி ஆர்டிஞ்ச் காலேஜில்' உரையாற்றும்போது எல்லாப் பிரிவுகளையும் ஒரே மருத்துவ மனையில் ஏற்படுத்த முடியாது; அதற்கு செலவு ஏராளமாக ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக யூனியன் ஹெல்த் மினிஸ்டர் திரு. சங்கரானந்த் அவர்கள் ஒரு கடிதத்தை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். ஒவ்வொரு முக்கியமான பிரிவையும் ஒவ்வொரு பெரிய மருத்துவமனையில் ஏற்படுத்தவேண்டும் என்பதை ஒரு கொள்கையாக மத்திய அரசு வைத்திருக்கிறது. அதே ரீதியில் தான் நாமும் செய்கிறோம். கார்டியாலஜி என்றால் அது உடனடியாக கவனிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த குடல் புண் சம்பந்தப்பட்ட நோய் அவ்வளவு அவசரமானது அல்ல; கொஞ்சம் மெதுவாக கூட சிகிச்சை செய்யலாம். ஆகையால் இந்த காஸ்ட்ரோ என்ட்ராலஜி பிரிவு சென்னையில் மட்டும் இப்போது இருக்கிறது. ஒரே இடத்தில் இருந்தால்தான் சௌகரியமாக இருக்கும். இந்தப் பிரிவு முழு அளவுக்குப் பயன்படுத்தப்பட்டு, இனிமேல் இங்கே இடமில்லை என்று தெரிந்தால் இதேமாதிரி மதுரையில் ஒரு பிரிவை ஆரம்பிக்கலாம்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண். 433— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் குழந்தைகள் பிரிவில் தற்போதுள்ள படுக்கைகள் எவ்வளவு?

(ஆ) இதனை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 105 படுக்கைகள்.

(ஆ) 1980–81 ஆம் ஆண்டில் இம்மருத்துவமனைக்கென 16 படுக்கைகள் கொண்ட குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சைப் பகுதி ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

1982 மார்ச் 9]

[முற்பகல் 9-50]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மதுரை அளவுக்கு இல்லாவிட்டாலும் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் தினசரி சிகிச்சைக்காக வந்து போகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதிலே, குறிப்பாக, நூற்றுக்கணக்கான குழந்தைகள் அங்கே வந்து சிகிச்சை பெற வேண்டிய நிலைமையில் படுக்கை வசதி கிடைக்காத காரணத்தால் அவர்கள் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆகவே, அந்த மருத்துவமனையிலே குறைந்தது 500 படுக்கைகளுக்குக் குறையாமல் விஸ்தரிப்பு செய்து அந்தக் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காகவேண்டிய டாக்டர்கள், ஸ்டாஃப் போன்றவர்களையும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் மூலக் கேள்விக்கு அளித்த பதிலை அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். 16 படுக்கைகள் கொண்ட சர்ஜிக்கல் வார்டினை அங்கே துவக்குவதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

In the year 1980-81 sanction has been accorded for the construction of a 16 bed Paediatrics Surgical Ward for this Hospital.

என்ற அந்தக் குறிப்பையும் நான் சொல்லி இருக்கிறேன். அதற்காக 2.92 இலட்சம் செலவாகிறது. ஆனால், மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் கேட்பது போன்று 500 படுக்கைகளை ஏற்படுத்துவது என்பது இயலாது. ஏராளமாகச் செலவு ஆகும் அந்த அளவுக்கு எந்த ஒரு அரசாங்கத்தாலும் செலவழிக்க முடியாது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் 500 படுக்கைகள் வேண்டும் என்று சொல்வதன் காரணம் பல நூற்றுக்கணக்கான குழந்தை நோயாளிகள் தினசரி வந்து படுக்கை கிடைக்காமல் காத்திருக்கிறார்கள் என்பதற்காகத்தான். ஆகவே, அங்கே குழந்தைகளுக்கு என்று தனியாக ஆப்பரேஷன் பிரிவு இல்லாததால் சில கேஸ்கள் சென்னைக்கு வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே இருப்பதால் 500 படுக்கைகள் என்ற அளவுக்கு ஏற்படுத்த முடியாவிட்டாலும் வேறு ஏதாவது ஆலோசனையை அங்கே நடைமுறைக்குக் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்திருக்கின்றதா ? அப்படிச் செய்தால் நலமாக இருக்கும். தற்போது 7 இலட்சம் மக்களுக்கு மேல் ஜனத்தொகை இருக்கின்ற அந்த மாநகரத்திற்கு தனியாக ஒரு குழந்தைகள் நல மருத்துவமனையை ஸ்தாபிப்பதற்கும் அதிலே ஆப்பரேஷன் தியேட்டர் போன்றவற்றைச் சிறந்த முறையிலே ஏற்படுத்துவதற்கும் முயற்சி செய்வார்களா ?

[1982 மார்ச் 9

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த ஆப்பரேஷன் தியேட்டர் கட்டி முடிக்கப்பட்டவுடனேயே பல பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண முடியும். அதுமட்டு மல்ல அந்த மருத்துவமனையில் ஏற்கெனவே, குழந்தைகள் பிரி விலே 105 படுக்கைகள் இருக்கின்றன என்றும் சொல்லி இருக் கிறேன். குழந்தைகள் பிரிவினையைப் பொறுத்த வரையிலே கேஸ்ட்ரோ என்டரைட்டீஸ் என்ற அந்த வாந்தி பேதி நோயினால் பாதிக்கப்படுபவர்கள்தான் அங்கே அந்த எண்ணிக்கையிலே பாதிப் பேராக இருக்கிறார்கள். ஆகவே, இதற்காக மேஸிவ் ஓரல் ஹைட்ரேஷன் என்ற ஒரு கேம்ப்பெயின் ஆரம்பித்திருக்கிறோம். அதன்மூலம் அந்த நோயாளிகள் மருத்துவமனையிலே அனுமதிக் கப்படாமலேயே அவுட் பேஷன்ட்டாக இருந்து சிகிச்சை பெறு வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இதனை ஒரு பெரிய ஸ்கீமாகக் கொண்டுவந்து இருக்கிறோம். இதிலே வெற்றி கண்டு விட்டால் அங்கே குழந்தைகளின் படுக்கைகளை உயர்த்த வேண் டிய தேவையில்லாமல் சமாளிக்க முடியும் என்று கருதுகிறோம்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, 500 படுக்கை களை அமைச்சர் அவர்களால் தர முடியாவிட்டாலும் அமைச்ச ரவர்கள் பதிலிலே குறிப்பிட்ட அளவினைப் போல இரண்டு மடங்கு படுக்கைகளையாவது தருவதற்கு அமைச்சரவர்கள் முயற் சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அந்த மருத்துவமனையிலே ஜெனரேட்டர் வசதி இல்லாத காரணத்தால் பல்வேறு தொல்லைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இந்த இரண்டு கோரிக்கை களையும் அமைச்சரவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, ஜெனரேட்டரைப் பொறுத்தவரையிலும் அந்தப் பிரச்சினை இப் போது தீர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால், படுக்கைகளின் எண் ணிக்கையை உயர்த்துவதைப் பொறுத்தவரையிலே நான் மாண்பு மிகு திரு. ரமணி அவர்களுக்கு அளித்த பதிலே இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவேகானந்தர் நினைவுப்பாறைக்குச் செல்ல உபயோகிக்கப்படும் இயந்திரப் படகு.

*வினா எண் 434—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சுற்றுலாத்துறை இயந்திரப்படகை விவேகா னந்தர் நினைவுப்பாறைக்கு உபயோகப்படுத்த கொடுத்துள்ளதா ;

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) எப்பொழுது முதல் பயன்படுத்தப்படும் ?